ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2018.04.06

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 சனவரி

**பொதுநோக்கு**

இலங்கையின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றமானது வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதற்கு மத்தியிலும் நிதியியல் கணக்கிற்கான உயர்வான உட்பாய்ச்சல்களுடன் 2018 சனவரியில் மேம்பாடொன்றினை எடுத்துக்காட்டியது. வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த அதேவேளை இறக்குமதிகள் மீதான செலவினமும் மாதத்தின் போதான ஏற்றுமதி வருவாய்களின் செயலாற்றத்தினை கடந்து கணிசமாக அதிகரித்தது. எவ்வாறு இருப்பினும், கடந்த ஆண்டின் போது அவதானிக்கப்பட்ட மிதமான போக்கினை நேர்மாற்றி சுற்றுலாத்துறை வருவாய்கள் 2018 சனவரியின் போது குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. 2017இன் போது வேகக்குறைவொன்றினை அடையாளப்படுத்திய தொழிலாளர் பணவனுப்பல்களும் 2018 சனவரியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, சென்மதி நிலுவை நிதியியல் கணக்கானது அரசாங்கப் பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை போன்றவற்றில் வெளிநாட்டு முதலீடுகளுடன் 2018 சனவரியில் உயர்வான உட்பாய்ச்சலொன்றினை தொடர்ந்தும் அனுபவித்தது. 2018 சனவரியின் இறுதியிலுள்ளவாறு, நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.7 பில்லியனாக 4.3 மாதங்கள் இறக்குமதிகளுக்குச் சமமானதாகவிருந்தன. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, 2018 சனவரியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிரான 0.6 சதவீதத்தினாலும் 2018 ஏப்பிறல் 5 வரை ஆண்டின் போது இதுவரை 2.0 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் 17/16 (%) | சனவரி 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் சன18/சன17 (%) |
|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 11,360 | 10.2 | 865 | 965 | 11.6 |
| இறக்குமதிகள் | 20,980 | 9.4 | 1,799 | 2,014 | 12.0 |
| வர்த்தக மீதி (தேறிய) | -9,619 | | -934 | -1,049 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 3,925 (ஆ) | 11.6 | 407 (ஆ) | 443 (இ) | 8.9 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,164 (ஈ) (உ) | -1.1 | 670 (ஈ) (உ) | 729 | 8.8 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 279 | | -11 | 37 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் | 5,702 | | 217 | 286 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 1,667 | | 83 | 170 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 1,500 | | - | - | |
| நீண்ட காலக் கடன்கள | 1,535 | | 134 | 116 | |
| வெளிநாட்டு நாணய நியதிகளில் நிதியிடல் வசதிகள் | 1,000 | | - | - | |
| ப.நா.நி – விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் பெறுகைகள் | 419 | | - | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | 1,913 | | | | |
| திரண்ட நிலுவை | 2,068 | | -212 | -6 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதுடன் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.

(உ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட திருத்திப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.


(ஊ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(எ) 2017 இற்காக கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

2018 சனவரியில் வர்த்தக நிலுவைப் பற்றாக்குறையானது இறக்குமதிகளின் கணிசமான மட்டம் ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பினை எதிரீடு செய்வதன் காரணமாக தொடர்ச்சியாக இரண்டாம் மாதத்திற்காகவும் ஐ.அ.டொலர் 1 பில்லியனையும் விஞ்சி விரிவடைந்தது.


வரைபடம் 1: மாதாந்த வர்த்த நிலுவை




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

2017 சனவரியில் ஏற்றுமதி வருவாய்கள் 3.8 சதவீதத்தினால் சுருங்கியமையினால் 2018 சனவரியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைந்த தளத் தாக்கத்தினால் பகுதியளவாகத் தூண்டப்பட்டு ஐ.அ.டொலர் 965 மில்லியனை எய்தி இரட்டை இலக்க வளர்ச்சியொன்றினை (ஆண்டுக்காண்டு) தொடர்ந்தும் பதிவுசெய்தது. உணவு, குடிவகை, புகையிலை, பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் தேயிலை போன்றவற்றிலிருந்தான ஏற்றுமதி உழைப்புகள் ஏற்றுமதிகளில் வளர்ச்சிக்கு பாரியளவில் பங்களித்தன. தானிய உணவு தயார்படுத்தல்கள் தவிர அநேகமாக அனைத்து வகைகளிலிருந்தும் உயர்வான வருவாயின் காரணமாக 2018 சனவரியில் உணவு, குடிவகைகள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகள் இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்தன. 72.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து அளவுகளில் அதிகரிப்பினையும் நீர்க்கல எரிபொருள் விலைகளில் அதிகரிப்பினையும் பிரதிபலித்து பெற்றோலிய உற்பத்தி ஏற்மதிகளிலிருந்தான வருவாய்கள் 2018 சனவரியில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தன. மேலும், இறப்பா உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் அநேகமாக அனைத்துத் துணைத்துறைகளினதும், குறிப்பாக டயர்கள் ஏற்றுமதியின் மேம்பட்ட செயலாற்றத்தின் காரணமாக அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, புடைவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் கனடா, ஐக்கிய அரபு இராச்சியம், சீனா, சவூதி அரேபியா மற்றும் யப்பான் போன்ற மரபுசாரா சந்தைகளுக்கான ஏற்றுமதிகளில் குறைவொன்று காணப்பட்ட போதிலும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பவற்றுக்கான முறையே 4.9 சதவீம் மற்றும் 1.7 சதவீதத்தினால் அதிகரித்தமையின் காரணமாக மிதமாக அதிகரித்தன. அதேவேளை, உயர்வான விலைகள் மற்றும் அளவுகளின் காரணமாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் அதிகரித்தன. மேலும், இரத்தினக்கற்கள், வைரங்கள், ஆபரணங்கள், அடிப்படை உலோகம் மற்றும் அதன் பகுதிகள், பொறிகள் மற்றும் இயந்திரச் சாதனங்கள், பயணப் பொருட்கள், காலணிகள், கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டவை அத்துடன் கடலுணவு மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள், வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தபட்டவை போன்றவற்றிலிருந்தான வருவாய்களும் ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன. எனினும், தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், வறட்சி நிலைமைகளின் காரணமாக குறைந்த உள்நாட்டு தெங்கு உற்பத்தியின் விளைவாக உலர்த்தப்பட்ட தேங்காய், தேங்காயெண்ணெய் மற்றும் கொப்பறா போன்ற தேங்காய் உட்பகுதி உற்பத்திகளின் அளவுகளில் வீழ்ச்சியுடன் 2018 சனவரியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக, அச்சுக் கைத்தொழில் உற்பத்திகள், இறப்பர் மற்றும் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் மாதத்தின் போது குறைவடைந்தன. 2018 சனவரியில் மொத்த ஏற்றுமதிகளின் அண்ணளவாக 51 சதவீதத்தினை கொள்கின்ற இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிக்கான முன்னனி சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன அமைந்திருந்தன.

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து வருவாய்கள்(அ)

| வகை | சன-திசெ 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் 17/16 (%) | சனவரி 2017 (ஐ.அ.டொ. மில்) | சனவரி 2018 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் சன 18/சன 17 (%) |
|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **8,541.9** | **7.6** | **668.0** | **757.6** | **13.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 392.7 | 21.3 | 22.1 | 48.2 | 118.3 |
| விலங்குத்தீன் | 80.2 | 18.2 | 6.9 | 7.1 | 3.0 |
| புடவை மற்றும் ஆடைகள் | 5,031.9 | 3.0 | 426.3 | 434.8 | 2.0 |
| இதில் ஆடைகள் | 4,739.3 | 3.0 | 405.2 | 409.3 | 1.0 |
| புடவைகள் | 205.4 | 2.6 | 14.7 | 18.5 | 25.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 87.3 | 7.6 | 6.4 | 7.0 | 8.4 |
| இறப்பர் உற்பத்திகள் | 835.4 | 8.8 | 58.0 | 71.0 | 22.6 |
| இரத்தினக் கற்கள், வைரங்கள், ஆபரணங்கள் | 257.5 | (6.0) | 21.8 | 27.5 | 26.4 |
| பொறிகள் மற்றும் எந்திரச் சாதனங்கள் | 370.8 | 16.7 | 26.0 | 29.7 | 14.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 162.3 | 23.4 | 7.3 | 7.4 | 1.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 434.3 | 51.4 | 29.5 | 52.7 | 78.8 |
| இரசாயன உற்பத்திகள் | 146.4 | 16.0 | 11.0 | 12.5 | 14.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 138.8 | 19.0 | 11.2 | 11.3 | 0.7 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 48.8 | 15.3 | 4.6 | 1.5 | (67.5) |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 158.4 | (4.4) | 9.3 | 13.0 | 39.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 74.6 | 12.5 | 4.7 | 6.2 | 33.8 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 115.9 | 29.3 | 8.2 | 12.1 | 48.7 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 33.7 | (1.9) | 2.1 | 2.0 | (6.2) |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 260.2 | 6.0 | 19.2 | 20.5 | 6.7 |
| **2. வேளாண்மை உற்பத்திகள்** | **2,767.2** | **19.0** | **193.7** | **204.1** | **5.4** |
| தேயிலை | 1,529.8 | 20.5 | 101.6 | 111.8 | 10.1 |
| இறப்பர் | 38.9 | 19.1 | 5.0 | 4.1 | (19.2) |
| தெங்கு | 347.9 | (4.9) | 27.3 | 21.1 | (22.5) |
| வாசனைத்திரவியங்கள் | 406.2 | 28.1 | 30.4 | 30.0 | (1.3) |
| காய்கறிகள் | 28.5 | 7.5 | 1.8 | 1.9 | 3.3 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 36.5 | 17.1 | 2.0 | 1.8 | (13.7) |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 138.7 | 21.6 | 7.3 | 10.5 | 44.4 |
| கடலுணவு | 240.6 | 41.9 | 18.2 | 22.9 | 25.8 |
| **3. கனிப்பொருள் மற்றும் ஏனையவை** | **51.4** | **18.0** | **3.0** | **3.6** | **19.3** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **11,360.4** | **10.2** | **864.7** | **965.4** | **11.6** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

இறக்குமதிகள் செலவினமானது எரிபொருள் மீதான பெருமளவிற்கு இறக்குமதிப் பட்டியல்களின் பிரதான காரணமாக தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் 2018 சனவரியில் ஐ.அ.டொலர் 2 பில்லியன் மிகையினை பதிவுசெய்தது. சுத்திகரிப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகளின் அளவின் குறைவுக்கு மத்தியிலும் மசகெண்ணெயின் உயர்வான அளவுகள் மற்றும் அனைத்து எரிபொருள் வகைகளிலும் பதிவாகிய குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்புகள் போன்றன காரணமாக மாதத்தின் போது எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தது. மசகெண்ணெய் சராசரி விலையானது 2017 சனவரியில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 57.39 இருந்து 2018 சனவரியில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 72.04 ஆக அதிகரித்தது. மேலும், உரம் மீதான இறக்குமதிச் செலவினமானது உயர்வான சராசரி விலைகளிலும் மற்றும் உரத்தின் குறிப்பாக யூரியாவின் அளவுகளிலும் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலித்து 2018 சனவரியில் கணிசமாக அதிகரித்தது. தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் 2018 சனவரியில் குறிப்பிடத்தக்களவு தொடர்ந்தும் அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, வரவுசெலவுத் திட்டம் 2018இல் மின்சார ஊர்திகள் மீதான வரிக்குறைப்பினைத் தொடர்ந்து மின்சார ஊர்திகளின் உயர்வான இறக்குமதிகளின் காரணமாக தனிப்பட்ட ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. இரும்பு மற்றும் உருக்கு என்பனவற்றின் உயர்வான இறக்குமதிகளின் பிரதான காரணமாக அடிப்படை உலோகங்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் அதிகரித்தது. சராசரி அரிசி இறக்குமதி விலைகளில் பதிவாகிய வீழ்ச்சிக்கு மத்தியில் அரிசி மீதான இறக்குமதிச் செலவினமானது உயர்வான அரிசி இறக்குமதி அளவுகளின் காரணமாக 2018 சனவரியில் உயர்ந்தது. இதற்குப் புறம்பாக, பால் உற்பத்திகள், மிளகு மற்றும் கடதாசி அட்டைகள் மற்றும் அதன் பகுதிகள் போக்குவரத்துக் கருவிகள் மற்றும் ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள் மற்றும் கட்டடப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் மாதத்தின் போது அதிகரித்தன. எனினும், பொறியியல் கருவிகள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள், மருத்துவ மற்றும் ஆய்வுகூடக் கருவிகளில் பதிவாகிய வீழ்ச்சியின் பிரதான காரணமாக 2018 சனவரியில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தது. அத்துடன், புடவை இறக்குமதியில் வீழ்ச்சியினால் தூண்டப்பட்டு இம்மாதத்தின் போது புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தது. வேளாண்மை உள்ளீடுகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினமும் 2018 சனவரியில் குறைவடைந்தது. 2018 சனவரியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், யப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் மொத்த இறக்குமதிகளில் அண்ணளவாக 58 சதவீதத்தினைக் கொள்ளுகின்ற முக்கிய இறக்குமதி மூலமாக விளங்கின.

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | சன-திசெ 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் 17/16 (%) | சனவரி 2017 (ஐ.அ.டொ. மில்) | சனவரி 2018 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் சன 18/சன 17 (%) |
|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **4,502.5** | **4.3** | **358.8** | **441.5** | **23.0** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 1,841.1 | 13.1 | 143.6 | 183.7 | 27.9 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 314.5 | 1,320.2 | 12.7 | 33.2 | 160.9 |
| இதில் அரிசி | 300.9 | 2,244.7 | 11.7 | 31.3 | 167.4 |
| பால் உற்பத்திகள் | 315.8 | 26.7 | 21.1 | 31.9 | 51.4 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 258.0 | (25.1) | 22.0 | 27.6 | 25.5 |
| கடலுணவு | 217.5 | (8.3) | 18.2 | 20.6 | 13.4 |
| வாசனைத்திரவியங்கள் | 92.8 | (29.7) | 9.5 | 7.5 | (20.3) |
| குடிபானங்கள் | 81.5 | (16.8) | 6.0 | 4.8 | (20.1) |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 46.0 | 28.1 | 4.3 | 4.7 | 10.7 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 514.9 | 1.3 | 49.9 | 53.3 | 6.7 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 2,661.5 | (1.1) | 215.2 | 257.8 | 19.8 |
| ஊர்திகள் | 772.7 | (2.8) | 66.0 | 95.0 | 44.1 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 369.0 | 0.9 | 30.1 | 37.5 | 24.6 |
| வீட்டுச்சாதன மற்றும் தளபாடப் பொருட்கள் | 186.2 | 2.2 | 13.7 | 15.8 | 15.0 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 520.0 | (1.1) | 38.9 | 44.1 | 13.4 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 281.2 | 13.8 | 22.1 | 24.4 | 10.4 |
| அழகுசாதனங்கள் மற்றும் மலசலகூடப் பொருட்கள் | 77.4 | (10.8) | 7.4 | 6.8 | (8.8) |
| இறப்பர் உற்பத்திகள் | 94.3 | (15.8) | 9.7 | 7.8 | (19.6) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 360.8 | (4.4) | 27.3 | 26.4 | (3.3) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **11,435.8** | **15.9** | **950.6** | **1,133.3** | **19.2** |
| எரிபொருள் | 3,427.9 | 38.2 | 282.8 | 362.0 | 28.0 |
| இதில் மசகெண்ணெய் | 704.0 | 18.1 | 42.0 | 103.4 | 146.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 2,462.5 | 45.9 | 204.7 | 223.9 | 9.4 |
| நிலக்கரி | 261.5 | 32.9 | 36.1 | 34.7 | (3.8) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 772.4 | 50.1 | 69.0 | 104.7 | 51.8 |
| இதில் தங்கம் | 649.8 | 73.7 | 64.1 | 93.7 | 46.1 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 2,724.2 | 0.7 | 253.0 | 245.2 | (3.1) |
| அடிப்படை உலோகங்கள் | 628.7 | 37.8 | 38.4 | 59.6 | 55.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 632.6 | 2.4 | 49.7 | 54.7 | 10.1 |
| கடதாசி மற்றும் கடதாசி அட்டை மற்றும் அதன்பகுதிகள் | 484.6 | (0.5) | 34.1 | 43.1 | 26.7 |
| உரம் | 102.8 | (24.9) | 4.2 | 42.4 | 918.9 |
| கனிம உற்பத்திகள் | 211.1 | (4.9) | 15.1 | 13.7 | (9.3) |
| வேளாண்மை உற்பத்திகள் | 204.3 | 16.6 | 15.6 | 12.9 | (17.1) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 67.7 | 0.1 | 3.4 | 2.2 | (35.3) |
| ஏனைய உடனடிப்பொருட்கள் | 2,179.4 | 8.6 | 185.6 | 192.7 | 3.8 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **4,894.7** | **(1.7)** | **432.2** | **436.9** | **1.1** |
| பொறி மற்றும் சாதனங்கள் | 2,620.6 | (4.4) | 250.6 | 240.3 | (4.1) |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| கட்டடப் பொருட்கள் | 1,591.4 | 1.4 | 136.0 | 143.1 | 5.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 674.9 | 1.8 | 44.3 | 52.7 | 19.1 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 7.8 | (7.8) | 1.4 | 0.7 | (51.7) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **146.8** | **1,024.6** | **57.3** | **2.9** | **(95.0)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **20,979.8** | **9.4** | **1,798.9** | **2,014.5** | **12.0** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**


2018 சனவரியில் சுற்றுலாப் பயணிகள் வருகைகள் தரப்பட்ட மாதமொன்றில் இரண்டாவது அதிகூடிய வருகை எண்ணிக்கையினை பதிவுசெய்கின்ற 8.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. அதற்கமைய, இம்மாதத்தின் போதான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் எண்ணிக்கையானது 2017 திசெம்பரில் 244,536 அதிகூடிய மாதாந்த வருகையுடன் ஒப்பிடுகையில் 238,924 ஆகவிருந்தது. 2018 சனவரியில் மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகையின் 47.2 சதவீதத்திற்கு இந்திய, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ் என்பன வகைகூறி முதல் உயர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் மூலங்கலாக விளங்கின. சுற்றுலாப் பயணி வருகைகளின் அதையொத்த போக்கினைத் தொடர்ந்து சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்[1] 2018 சனவரியில் ஆண்டுக்காண்டு ஐ.அ.டொலர் 443 மில்லியனாக அதிகரித்தது, அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017 சனவரியில் ஐ.அ.டொலர் 670 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 சனவரியில் ஐ.அ.டொலர் 729 மில்லியனாக ஆண்டுக்காண்டு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2018ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.


**நிதியியல் பாய்ச்சல்கள்**

அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள், 2017 சனவரியில் பதிவான தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2018 சனவரியில் தொடர்ச்சியாக பதினொராவது மாதமாக தேறிய உட்பாய்ச்சலொன்றினைக் காட்டின. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் முதனிலை மற்றும் இரண்டாம்நிலை சந்தைப் பாய்ச்சல்கள் உள்ளடங்கலாக 2017இன் நேரொத்த காலப்பகுதியில தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. மேலும், மாதத்தின் போது அரசாங்கத்திற்கான நீண்டகால உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. 2017இல் முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்ற நியதிகளில் இலங்கை வரலாற்றில் ஒருபோதுமில்லாத அதிகூடிய வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சலை பதிவுசெய்கின்ற ஐ.அ.டொலர் 1,913 மில்லியனைப் பெற்றுக்கொண்டது.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

நாட்டின் மொத்த அலுவலல்சார் ஒதுக்குகள் மாதத்தின் போது ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தில் கடப்பாடுகளுக்கான காலமுறையான கொடுப்பனவொன்றின் அடிப்படைக் காரணமாக 2017இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இன் சனவரி இறுதியளவில் ஐ.அ.டொலர் 7.7 பில்லியனாக, 4.3 மாத இறக்குமதிகளுக்கு சமமாக வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்குகின்ற மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும் 2017 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 10.4 பில்லியனிலிருந்து 2018 சனவரி இறுதியில் ஐ.அ.டொலர் 10.0 பில்லியனாக (5.7 மாத இறக்குமதிகளுக்குச் சமமான) வீழ்ச்சியடைந்தது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீத அசைவுகள்**

2018 ஏப்பிறல் 05 வரை ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2.0 சதவீதத்தினால் பெறுமானத்தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபா ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கு ரூபாவின் செலாவணி அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 பெப்புருவரி 20 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -2.0% |
| யூரோ | -13.5% | -4.8% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -6.4% |
| யப்பானி யென் | -5.1% | -7.1% |
| கனேடியன் டொலர் | -8.6% | -0.5% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | -1.0% |
| இந்தியன் ரூபா | -7.5% | -0.6% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி